DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE,CHEYYAR

CASE NO. SC. No. 68/2024

Prosecution witness PW - 1

| | | |
|---|---|---|
| Name | …. | **கலைவாணி** |
| Husband/Father's Name | .... | **மகேஷ்வரன்** |
| Village | .... | |
| Taluk | .... | |
| Caste | .... | |
| Calling | .... | |
| Religion | .... | |
| Age | …. | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of 27th day of January 2026.

(எதிரிகள் ஆஜர்)

**<u>முதல் விசாரணை</u>**

நான் முனுகபட்டு கிராமத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் வெங்கடேசன், சுரேஷ், ஜெகன் மற்றும் தரணி ஆகியோர்களை தெரியும். என் கணவர் மகேஷ்வரன் என்பவர் பட்டு தறி நெய்து கொண்டு இருந்தார். கடந்த 04.03.2023 அன்று என் கணவர் மகேஷ்வரன் என்பவர் மாலை 6.00 மணியளவில் புடவை எடுத்து கொண்டு வெங்கடேசன் வீட்டு சென்றார். சேலை நெய்வதற்கான காலதாமதம் ஆகிவிட்டது. புடவையை தூக்கி எறிந்துவிட்டதனால், என் கணவர் தொழில் செய்பவர்கள் புடவையை தூக்கி எறியலாமா என்று கேட்டார். அதற்கு வெங்கடேசன் என்பவர் செருப்பால் அடிப்பதாக சொன்னார், அதற்கு என் கணவர் அடிப்பீங்களா, அடிங்க பார்க்கலாம் என்று சொன்னார். சுரேஷ், ஜெகன் மற்றும் தரணி ஆகிய மூவரும் சேர்ந்து ஒருவர் என் கணவரின் கையை பிடித்து கொண்டு மூக்கிலும், வலது புஜத்திலும் குத்தினார், தரணி என்பவர் முதில் அடித்ததாக சொன்னார். என் கணவர் அழுது கொண்டே என் வீட்டிற்கு வந்தார். நான் அவரை எதற்கு அழுகிறீர்கள் என்று கேட்டேன், என்னை நான்கு நபர்கள் அடித்ததாக சொன்னார், வாயில் ரத்தம் வந்தது, சட்டையும் கிழிந்த நிலையில் இருந்தது. பின்பு நான் பொழுது விடிந்ததும், பேசலாம் என்று சொன்னேன். கொஞ்ச நேரம் மாரியம்மன் கோயிலுக்கு சென்று வருவததாக என்னிடம் கூறிவிட்டு சென்றார். என் மாமியார் வசந்தா கோயில் அருகே

சென்று பார்த்தார், கோயில் அருகில் கொஞ்ச நேரம் இருக்கட்டும் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டார். அதன்பிறகு பால் கறந்து அதனை ஊற்றுவதற்காக என் மாமியார் தெருவில் செல்லும் போது நான் என் மகனை பார்த்து வருகிறேன் என்று சொல்லிவிட்டு சென்றார், அங்கு ஆள் இல்லை என்று சொல்லிவிட்டார். என் மாமியார் என் கணவரை தேடிகொண்டு சென்றார். நானும், கூடே சென்று தேடினேன், அவர் கிடைக்கவில்லை. உடன் மனோகர் என்பவரும் எங்களுடன் தேடினார், அவரும் இல்லை என்று சென்றுவிட்டார். நாங்கள் என் கணவர் வருவார் என்று வீட்டிலேயே இருந்தோம், விடியற்காலை தண்ணீர் தெளிப்பதற்காக வீட்டின் வாசலில் வரும்போது ஜெகன் என்பவர் வீட்டு வாசலில் நின்று கொண்டு இருந்தார், எதற்கு இங்கு நிற்கீர்கள் என்று கேட்தும் சென்றுவிட்டார். அதன்பிறகு என் மாமியார் எங்கள் நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்ச வந்தாரா என்று பார்ப்பதற்காக சொன்றார். வரும்வழியில் லோகநாதன் என்பவர் இருந்தார், என் மாமியார் அவரிடம் விசாரித்தார். அப்போது முள்வேலி இடத்தில் யாரோ ஒரு நபர் அமர்ந்துள்ளது போல் உள்ளது என்று கூறிவிட்டு சென்றுவிட்டார். அதன்பிறகு மாமியார் அங்கு சென்று பார்த்தபோது என்னிடம் காட்டப்படும் கயிற்றால் அமர்ந்த நிலையில் தூக்கு மாட்டிக்கொண்டார். மேற்படி கயிறு சான்று பொருள் 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் பிறகு என் மாமியார் சத்தம் போடவே இரண்டு நபர்கள் கோவிந்தராஜ் மற்றும் ராமதாஸ் ஆகியோர் என் கணவரை கயிற்றில் இருந்து இறக்கினார்கள். அதன் பிறகு இது சம்பந்தமாக பெரணமல்லூர், காவல்நிலையத்திற்கு அங்கிருந்தவர்கள் புகார் செய்தனர். என்னிடம் காட்டப்படும் புகார் நான் காவல் நிலையத்தில் கொடுத்தது, அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். மேற்படி புகார் மனு அ.த.சா.ஆ.1 ஆகும். அதன்பிறகு பிரேத பரிசோதனைக்காக திருவண்ணாமலை, அரசு தலைமை மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள், பிரேத பரிசோதனை முடிந்து பிரேதத்தை எங்களிடம் ஒப்படைத்தார்கள். இது சம்பந்தமாக காவல் துறையினர் என்னை விசாரணை செய்தனர்.

**<u>1, 2, 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என் கணவர் வெங்கடேசன் என்பவரிடம் தறிநெய்வதற்கு முன்பாக பாஸ்கரன் என்பவரிடம் தறி நெய்தார். அவ்வாறு நெய்யும் போது நான் பாஸ்கரன் என்பவரிடம், என் கணவர் வெங்கடேசன் என்பவரிடம் தறி நெய்தோம். சம்பவம் நடந்த காலங்களில் நான் பாஸ்கரிடம் தறி நெய்ந்து கொண்டு இருந்தேன். என் மாமனார் மூர்த்தி வெங்கடேசனிடம் தறி நெய்து கொண்டு இருந்தார், அதனால் என் கணவர் அவரிடம் நெய்தார். இந்த சம்பவம் நடந்ததாக சொல்லும் 6 மாதத்திற்கு முன்பு சென்னையில் ஆட்டோ ஓட்ட சென்றார். அவர் 1 அல்லது 2 நாட்களில் சென்னையில் இருந்து திரும்பி வந்துவிட்டார். அதேபோல தறி

நெய்யும் போது எங்களிடம் ஒரு நோட் புக்கும், உரிமையாளரிடம் ஒரு நோட் புக்கும் இருக்கும் என்றால் சரிதான். அந்த நோட் எதற்கு என்றால் உரிமையாளருக்கு பட்டு, நூல் தறி ஆகியவற்றிக்கான கணக்கு என்றும் பின்பு தறி நெய்து உரிமையாளரிடம் கொடுக்கும்போது, எவ்வளவு கொடுக்கப்படுகிறது, கழிவு எவ்வளவு உள்ளது என்பதை பார்ப்பதற்கான என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளில் என் கணவர் நோட்டு புத்தம் எடுத்து சென்றார், ஆனால் திருப்பி வரும் போது என்னிடம் கொடுக்கவில்லை. பட்டு, நூல், ஜரிகை மற்றும் முன் தொகை ஆகியவைகளை நோட்டில் எழுதுவார்கள் என்றால் சரிதான். என் கணவர் சென்னை சென்றபோது, என் மாமியார் வசந்தா வெங்கடேசனிடம் பணியாற்றினார் என்றால் சரிதான். அதேபோல பட்டு, நூல், ஜரிகை மற்றும் முன் தொகை ஆகியவைகளை நோட்டில் என் மாமியார் எழுதி வாங்கினார் என்றால் சரிதான். என் மாமியார் ரூ.12,000/– நாங்கள் சேலை நெய்து கொடுத்ததற்கு வாங்கி வந்தார். மேற்படி பணத்தை ஜனவரி மாதம் பொங்கல் காலகட்டத்தில் வெங்கடேசனிடம் இருந்து பணம் வாங்கிவந்தார். என் மாமியார் தண்ணீர் தெளிக்கும் போது எதிரி ஜெகன் அங்குவந்தார் என்ற விவரத்தை போலிசார் விசாரணையில் சொல்லவில்லை. சம்பவ இடத்திற்கு தகவல் அறிந்து ஒரு பெண் போலிசும், இரு ஆண் காவலர்களும் வந்தார்கள். வந்த காவலர்கள் என் கணவர் இறந்த நிலையில் இடம் குறித்து எழுதினார்களா என்றால் எழுதினார்கள். பெண் போலிசார் எழுதி என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகாரில் தான் போலிசார் கையொப்பம் பெற்றார்கள். என் கணவர் சம்பத்தன்று சுமார் மாலை 7.00 மணிக்கு வந்தார் 7.30 மணிக்கு வெளியே சென்றுவிட்டார். எங்கள் தெருவும், எதிரிகள் தெருவும் பக்கத்து பக்கத்து தெரு என்றால் சரிதான். சம்பவத்தன்று 8.00 மணி வாக்கில் வெங்கடேசன் என் வீட்டிற்கு வந்தார் என்றால் சரிதான். அப்போது நானும், என் மாமியார் வசந்தா, சாட்சி ராமாஸ் மற்றும் மனோகர் இருந்தார்கள் என்றால் சரிதான். வெங்கடேசன் யாரிடம் பேசினார் என்றால் என் மாமியாரிடம் தான் பேசினார். என் மாமியாரிடம் என்ன பேசினார் என்றால் தெரியாது. எவ்வளவு நேரம் பேச்சு வார்த்தை நடந்தது என்றால் 15 நிமிடம் பேசினார். இது குறித்து என் மாமியார் என்னிடம் என்ன சொன்னார் என்றால் மேற்படி ரூ.12,000/– வெங்கடேசனிடம் வாங்கியது சம்பந்தமாக சொன்னார். போலிசார் விசாரணையின் போது மனோகரன் மற்றும் சீனுவாசன் இருந்தார்கள் என்றால் சரிதான். அவர்களிடம் சான்று பொருள் காண்பித்து கையொப்பம் வாங்கினார்கள். அதன்பிறகு மருத்துவமனைக்கு என் கணவரின் உடலை எடுத்து சென்றுவிட்டார்கள், அங்கு எங்களை வரச்சொன்னார்கள் என்றால் சரிதான். நான் காவல் நிலையம் சென்றபோது எதிரிகள் நால்வரும்

உட்காரவைத்திருந்தார்கள் என்றால் சரிதான், சுமார் காலை 9.00 மணிக்கு எதிரிகளை அடையாளம் காண்பிக்க சொன்னார்கள். எங்கள் ஊரில் நியாய விலை கடையில் வேலை செய்யும் மூர்த்தி என்பவரிடம் இதேபோன்று தறி மற்றும் நூல் சம்பவந்தமாக மூர்த்தியிடம் தான் தூக்கு மாட்டிக்கொள்வேன் என்று சொன்னால் அதுபற்றி தெரியாது. செல்வராஜ் என் சித்தப்பா. என் கணவர் கத்தி எடுத்துக் கொண்டு என் சித்தப்பாவிடம் தகராறு செய்து ஊர்காரர் சமாதானம் செய்தார்கள் என்றால் சரியல்ல. என் ஊரில் உள்ள சுந்தரமூர்த்தி என்பவரிடம் பிரச்சனை செய்தார் என்றால் சரியல்ல. ஊரில் உள்ள கோயில் ஏறி தற்கொலை செய்வதாக மிரட்டி போலிசார் இறக்கிவிட்டார் என்றால் சரியல்ல. என் கணவருடம் தகராறு செய்து என் அம்மா வீட்டிற்கு சென்றேன் என்றால் சரிதான். அவ்வாறு கோபித்து கொண்டு அம்மா வீட்டிற்கு சென்றது குடும்ப சண்டை. என் கணவர் எந்த மருத்துவ சிகிச்சையும் எடுத்து வரவில்லை. புகார் கொடுத்ததற்கு பிறகு போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு இரண்டு நாத்தனார் என்றால் சரிதான். தமிழ்செல்வி என்பவருக்கு பணம் வாங்கி கொடுத்தது சம்பந்தமாக பிரச்சனை நடந்தது என்றால் சரியல்ல. என் கணவரை, நான் சண்டையிட்டதாலும், என் மாமியாராலும் தான் இறப்பிற்கு காரணம் என்றாலும், என் மாமியார் ரூ.11,000/— யை வாங்கி தமிழ்செல்விக்கு கொடுத்தது தான் என் கணவர் இறப்பிற்கு காரணம் என்றாலும் சரியல்ல. என் கணவரின் தற்கொலைக்கு காரணம் என் கணவருக்கு தெரியாமல் வெங்கடேசனிடம் இருந்து பணம் வாங்கி நாத்தனார் தமிழ்செல்விக்கு கொடுத்தாகும், என்னிடம் ஏற்கனவே குடும்ப பிரச்சனையினால் ஏற்பட்ட மனஉளச்சல்தான் தற்கொலைக்கு காரணம் என்றால் சரியல்ல. வெங்கடேசனிடம் மீதுள்ள தொழில்போட்டி காரணமாக மற்றவர்கள் தூண்டுதலின் பேரில் பொய் புகார் கொடுத்து, அதற்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(3 ம் எதிரி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது. )**

Taken down by me in open Court and read over / interpreted to the witness in the presence of the accused and admitted by him / her to be correct.

Sd/- N.Suresh
**Assistant Sessions Judge,**
**Cheyyar.**